ஆண்டு பட்டிகை வழக்கு எண்.92/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 92/2024 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : சாந்தினி (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : ராஜேந்திரன் |
| Village | : வெள்ளக்குட்டு அம்மன் குளம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 23/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of April 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:49 A.M. - 12:10 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து காஞ்சிபுரத்தில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன செல்லம்மாள் என் அம்மா. ஆஜர் எதிரியை சம்பவத்தன்று என் வீட்டின் முன்பாக பார்த்திக்கிறேன். கடந்த 10.11.2023 ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் எங்கள் வீட்டின் எதிர் திசையில் உள்ள சுபஸ்ரீ உணவகத்தில் என் அம்மா செல்லம்மாள் வேலைக்கு சென்றுவிட்டு திரும்ப எங்கள் வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிக வேகமாக வந்து என் அம்மாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார். அதில் என் அம்மா தூக்கி எறியப்பட்டு, வலது பக்க தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டது. பின்னர் 108 அவசர ஊர்தியின் மூலம் என் அம்மாவை நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு முதலுதவி

சிகிச்சை பெற்ற பின்பு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம்.

2. அங்கு 13.11.2023ம் தேதி காலை 10.40 மணியளவில் என் அம்மா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரியின் பெயர் அழகர் ஆகும். அவர் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை. பின்னர் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதிக் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. விபத்து நடந்த அன்று 9.00 மணிக்கு புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள விபரம் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நான்தான் எழுதினேன். சம்பவத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நேரடியாகப் பார்த்தேன். புகாரில் நான் நேரடியாகப் பார்த்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சம்பவம் கேள்விப்பட்டுதான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, வீட்டிற்கு முன்னர்தான் நடந்தது. நான் பார்த்துதான் சம்பவ இடம் சென்றேன். நான் நேரடியாகப் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. என் அம்மா வேலைக்கு சென்றபோது விபத்து ஏற்பட்டதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற விசாரணையில் அதற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரிலும், முதல் விசாரணையிலும் என் அம்மா ஹோட்டலில் என்ன வேலை செய்கிறார் என்ற விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அம்மா ஹோட்டலில் வேலை செய்ததாக சொல்வது பொய் என்றும், அவ்வாறு வேலைக்கு சென்றபோது

விபத்து ஏற்பட்டதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தெரு விளக்கு இல்லை என்றால் சரியல்ல, ஹோட்டலுக்கு முன்பாக தெரு விளக்கு உள்ளது. எங்கள் வீடு, அதற்கு எதிரே ரோடு, அதற்கு அடுத்தாற்போல் ஹோட்டல் உள்ளது. சம்பவ தேதியில் ஹோட்டல் அருகே இருந்த விளக்கு எறிந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

5. எங்கள் வீட்டின் முன்பு தெரு விளக்கு இல்லை என்றால் சரிதான், ஆனால் சம்பவ இடம் வெளிச்சமாகத்தான் இருக்கும். சம்பவ இடம் வெளிச்சமாக இருக்கும் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பாண்டியன் ஹோட்டல் சம்பவ இடத்திற்கு எதிரே இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் ரோடு அகலமான சாலை என்றால் சரிதான். சம்பவத்தன்று மழை பெய்தது என்றால் சரிதான். எங்கள் வீட்டின் அருகில் பாதசாரிகள் நடந்து செல்ல எச்சரிக்கை பலகை எதுவும் இல்லை என்றால் சரிதான். நெடுஞ்சாலையில் பாதசாரிதான் இருபுறமும் பார்த்து செல்ல வேண்டிய கடமை உள்ளவர் என்றால் சரியல்ல. என் அம்மா சாலையை எந்த பக்கம் இருந்து எந்த பக்கமாக கடந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும்.

6. என் அம்மா அணிந்திருந்த ஆடையின் நிறம் என்ன என்றால், பச்சை கலர் சேலை அணிந்திருந்தார். இருட்டில் சேலையின் வண்ணம் தெரியாது என்றால் சரியல்ல, விளக்கு வெளிச்சத்தில் தெரியும். வாகனங்களுக்கு என் தாயார் அணிந்திருந்த சேலையின் நிறம் தெரியாது என்றால் சரியல்ல. எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல. எதிரியினால் விபத்து ஏற்பட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.24 17:35:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.92/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 92/2024 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : முத்துலெட்சுமி (கேள்வியுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : ராஜேந்திரன் |
| Village | : வெள்ளக்குட்டு அம்மன் குளம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 26/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of April 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12:12 P.M. - 12:27 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து தனியார் மாவு மில்லில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன செல்லம்மாள் என் அம்மா. அ.சா.1 என் தங்கை. ஆஜர் எதிரியை சம்பவத்தன்று என் வீட்டின் முன்பாக சம்பவ இடத்தில் வைத்து பார்த்திக்கிறேன். கடந்த 10.11.2023ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் என் அம்மா செல்லம்மாள் எங்கள் வீட்டின் எதிர் திசையில் உள்ள சுபஸ்ரீ உணவகத்தில் வேலை செய்து விட்டு சாலையைக் கடந்து எங்கள் வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்தபோது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த Hero Splendor இருசக்கர வாகனத்தை ஆஜர் எதிரி வேகமாக ஓட்டி வந்து என் அம்மாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதையும், அதில் என் அம்மாவுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதையும் நான் வீட்டில் இருந்தபோது நேரில் பார்த்தேன். பின்னர் 108 அவசர ஊர்தி மூலம் என் அம்மாவை நத்தம் அரசு

மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். பின்னர் உடனே அங்கிருந்த என் அம்மாவை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு என் அம்மா 13.11.2023ம் தேதி காலை 10.40 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. போலீசார் விசாரணையில் நான் சம்பவம் குறித்து தகவல் கேள்விப்பட்டுதான் சம்பவ இடம் சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பக்கத்து ஹோட்டல் கடைக்காரர் பாண்டி எனக்கு தகவல் சொன்னார். இந்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றும், எனவே எனக்கு பாண்டி தகவல் சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் தாயார் ஹோட்டலில் என்ன வேலை செய்து வருகிறார் என்ற விபரம் சொல்லவில்லை என்பதால் என் தாயார் ஹோட்டலில் வேலை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் வீட்டின் அருகே தெரு விளக்கு கிடையாது என்றால் சரிதான். எதிரே தெரு விளக்கு இல்லை என்றால் சரிதான். ஹோட்டலில் உள்ள வெளிச்சம் ரோட்டில் தெரியும். இந்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. ஹோட்டலில் விளக்கு எறிந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தில் ஹோட்டல் திறந்திருந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று மழை பெய்தது என்றால் சரிதான். பெரிய மழை பெய்ததா என்றால் இல்லை, சின்ன தூறல் தான். போலீசார் விசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்ததாக சொல்லிவிட்டு முதல் விசாரணையில் அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் முன்பு பாதசாரிகள் நடந்து

செல்லக்கூடிய எச்சரிக்கை பலகை எதுவும் இல்லை என்றால் சரிதான். என் தாயார் எப்படி ரோட்டைக் கடந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியின் வாகனம் என் தாயார் மீது வேகமாக வந்து மோதியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் தாயார்தான் சாலையை கடக்கக்கூடாத இடத்தில் கடந்தார் என்றால் சரியல்ல.

4. என் தாயார் சம்பவத்தன்று என்ன நிற ஆடை அணிந்திருந்தார் என்றால் சிவப்பு நிற ஆடை அணிந்திருந்தார் என்ற ஞாபகம். என் தாயார் அணிந்திருந்த ஆடை விபரம் கூட எனக்கு தெரியாது என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.24 17:35:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.92/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 92/2024 | LW- | 3 | PW- | 3 |

| | |
|---|---|
| Name | : கௌசிக் (கேள்வியுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : ராஜேந்திரன் |
| Village | : வெள்ளக்குட்டு அம்மன் குளம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 30/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of April 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12:28 P.M. - 12:39 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து நத்தம் டார்லிங் ஷோரூமில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன செல்லம்மாள் என் அம்மா. அ.சா.1 என் தங்கை. ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. கடந்த 10.11.2023 ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் என் தங்கை முத்துலெட்சுமி எனக்கு போன் செய்து என் அம்மாவுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாக கூறினார். அன்று நான் கோயம்புத்தூரில் வேலை செய்து கொண்டிருந்ததால் என் அம்மாவை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது சென்று பார்த்தேன். என் அம்மாவிற்கு தலையில் காயம்பட்டிருந்தது. என் அம்மா வீட்டின் அருகில் உள்ள உணவகத்தில் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தபோது, சாலையை கடந்து நடந்து சென்றதாகவும், நத்தத்திலிருந்து ஊராளிப்பட்டி நோக்கி வந்த இருசக்கர வாகனம்

மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரின் பெயர் அழகர் என்று சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. சம்பவம் நடந்து 3 நாள் கழித்து என் அம்மா இறந்த அன்றுதான் என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமான முதல் தகவல் அறிக்கையை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதியன்றோ, மறுநாளோ போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மறுநாள் விசாரித்தார்கள். இறந்த பிறகும் விசாரித்தார்கள். என் சகோதரிக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றும், அதனால் அவர் சொல்லியபடி விபத்து நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் என் அம்மா வேலைக்கு சென்றபோதுதான் விபத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மா வேலைக்கு சென்றபோது விபத்து ஏற்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியிருந்தால் அது தவறு. என் தாயார் ஹோட்டலில் வேலை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

3. என் வீட்டின் அருகில் மற்றும் எதிரில் தெரு விளக்கு இல்லை என்றால் சரிதான். தற்போது வரை இல்லை என்றால் சரிதான். சம்பவம் எவ்வாறு நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,
Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.24 17:36:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்